அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல 27/2008(1)

எனது இல: EST/7/LEAVE/03/3490
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2013.05.23

அமைச்சின் செயலாளர்கள் ,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்

**ஆசிரியர்களையும் உள்ளடக்கி அரச சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட மதகுருமார்களிற்கு தாபன விதிக்கோவையின் கீழ் விடுமுறை அனுமதியினை வழங்குதல்**

2008.12.31 ஆந்திகதிய 27/2008 இலக்கங்கொண்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் மீது தங்களின் கவனம் இத்தால் ஈர்க்கப்படுகின்றது.

02. மேற்போந்த சுற்றறிக்கையினால் திருத்தம் செய்யப்பட்ட தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 16:1:7 ஆம் உப பிரிவானது அதற்குப் பதிலாக பின்வரும் உப பிரிவின் உள்ளடக்கத்தின் மூலம் இத்தால் நீக்கப்படுகின்றது.

16:1:7 அரச சேவையில் பணியாற்றிக்கொண்டிருக்கும் வெளிநாடுகளில் சமய பணிகளிற்கானதும் நாட்டிற்குள்ளேயான சமய சேவைகளிற்கானதுமான பதவிகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து சமய நம்பிக்கைகளிலுமுள்ள மதகுருமார்களிற்கு ஆகக்கூடியது இரண்டு வருடங்கள் (02) கொண்ட சம்பளமற்ற விடுமுறையானது வழங்கப்படமுடியும். அத்தகைய விடுமுறைக்கு பரிந்துரைகளை மேற்கொள்ளும்போது/அனுமதியினை வழங்கும்போது, உரிய நிறுவனத்தலைவர்கள் நிறுவனத்தின் நாளாந்த கடமைகளின் செயற்பாடுகளுக்கு எவ்வித தடங்கலும் வராது என்பது தொடர்பில் திருப்தியுறல் வேண்டும்.

03. 2013.02.14 இருந்து இந்த ஏற்பாடுகள் அமுலிலிருக்கும் என்பதுடன் இந்த சுற்றறிக்கையின் ஏனைய ஏற்பாடுகள் தொடர்ந்தும் மாற்றமுறாமல் இருக்கும்.

ஒப்பம்: பி.பீ.அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு